## ஈரானில் சிக்கித் தவிக்கும்

# தமிழ்நாட்டு மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்பிடத் தேவையான நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 25-**

**ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரம் அடைந்து வரும் நிலையில், ஈரானில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டு மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புவதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (24.06.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழலினால் ஏற்பட்டுள்ள சவால்கள் காரணமாக ஈரானில் சிக்கித் தவிக்கும் இந்திய மீனவர்களின் நிலை குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஈரானில் சிக்கித் தவிக்கும் இந்திய மீனவர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்ப உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 498 மீனவர்களும், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 78 மீனவர்களும், தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து 72 மீனவர்களும் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 3 மீனவர்களும், ஆகமொத்தம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 651 மீனவர்கள் தற்போது ஈரானில் சிக்கித் தவிப்பதாகவும், அங்கு அதிகரித்து வரும் போர்ச் சூழல் காரணமாக அவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதோடு, தமிழ்நாட்டிற்குத் திரும்ப முடியாமல் உள்ளனர் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மீனவர்களின் பாதுகாப்பு குறித்த தகவல்கள் ஏதும் இல்லாத காரணத்தால், தாயகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஆழ்ந்த துயரத்தில் உள்ளனர் என்றும், மீனவர்கள் தாயகம் திரும்பும் செய்திக்காக அவர்கள் காத்திருப்பதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது அங்கு நிலவும் பதற்றமான சூழ்நிலையில் சிக்கியுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்பிட அரசின் உதவியை நாடுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த மனிதாபிமான விஷயத்தில், ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்தின் விரைவான தலையீடு, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மிகுந்த ஆறுதலைத் தரும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஈரானில் சிக்கித் தவிக்கும் மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவும், அவர்களின் நலனை உறுதிப்படுத்தவும், அவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புவதற்கும் தேவையான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரெ.தங்கம் மற்றும் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் டி.எம்.என். தீபக் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.

## 38–வது தேசிய விளையாட்டுப் போட்டி: பதக்கம் வென்ற

# தமிழ்நாடு அணி வீரர் - வீராங்கனைகள் 4 பேருக்கு உதவித்தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை,ஜூன்.25-*

*கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உத்தரகாண்ட் மாநிலத்தில் 38 வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் இறகுப் பந்து கலப்பு இரட்டையர் போட்டியில் தமிழ்நாடு அணி தங்கப்பதக்கம் வென்றது. தமிழ்நாடு பெண்கள் கூடைப்பந்து அணி தங்கப் பதக்கமும், தமிழ்நாடு ஆடவர் கூடைப்பந்து அணி வெள்ளிப் பதக்கமும் வென்றன.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.06.2025), தமிழ்நாடு அணி பதக்கம் வென்றதற்காக இறகுப் பந்து வீராங்கனை ஆத்ய வரியாத்துக்கு 3.75 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், கூடைப்பந்து வீராங்கனை லோபமுத்ரா திம்மையாவுக்கு 2.50 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், கூடைப்பந்து வீரர்கள் பிரணவ் பிரின்ஸ், பிரசாந்த் சிங் ராவத் ஆகியோருக்கு தலா 1.50 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் என மொத்தம் 9.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை ஊக்கத் தொகையாக வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரகண்ட் மாநிலத்தில் நடைபெற்ற 38 வது தேசிய விளையாட்டுப் போட்டியில் இறகுப்பந்து கலப்பு இரட்டையர் பிரிவில் தமிழ்நாடு அணி தங்கப்பதக்கம் வென்றதற்காக நேற்று (24.06.2025) இறகுப்பந்து வீராங்கனை ஆத்ய வரியாத்துக்கு ஊக்கத் தொகையாக 3.75 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் மாங்கனி விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய

# சந்தைத் தலையீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி - விவசாயிகளுக்கு உரிய தொகை வழங்கிட அனுமதி தாரீர்!

## ஒன்றிய வேளாண்மை துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

*சென்னை, ஜூன் 25-*

*தமிழ்நாட்டில் மாங்கனி விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய சந்தைத் தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme) செயல்படுத்தி விவசாயிகளுக்கு உரிய தொகையை வழங்கிட அனுமதி கேட்டு ஒன்றிய வேளாண்மை - உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு :-*

*தமிழ்நாட்டில் “மா” விளைச்சல் அதிகரித்து உள்ளதால், விவசாயிகளின் நலனைக் காத்திடும் வகையில், மாங்கனி விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய சந்தைத் தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme) செயல்படுத்தி விவசாயிகளுக்கு உரிய தொகையை வழங்கிட உரிய திட்டத்தினை செயல்படுத்திட கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*இக்கடிதத்தில், இந்த ஆண்டு அதிகமான “மா” உற்பத்தி மற்றும் சந்தையில் ஏற்பட்ட திடீர் மந்தநிலை காரணமாக தமிழ்நாட்டில் மாம்பழ விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்து, மாம்பழம் உற்பத்தி செய்யும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னலைத் தீர்க்கும் வகையில் சந்தைத் தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme under PM-AASHA) மாநிலத்தில் செயல்படுத்துமாறு தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*”பழங்களின் அரசன்” என்று அழைக்கப்படும் மாங்கனி, தமிழ்நாட்டில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 9.49 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், அகில இந்திய அளவில்”மா” சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் தமிழ்நாடு 7-வது இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் ”மா” இரகங்களில் பெங்களூரா இரகம் 80 சதவீதமும், அல்போன்சா இரகம் 50 சதவீதமும் மாம்பழக்கூழ் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.*

*இந்த ஆண்டு, சாதகமான காலநிலை காரணமாக அபரிமிதமான மாம்பழ உற்பத்தி ஏற்பட்டுள்ளது எனினும், முந்தைய ஆண்டுகளின் கையிருப்பு அதிகமாக இருப்பதால் தேவை-விநியோகத்தில் பெரும் இடையூறு ஏற்பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் தேவை கணிசமாகக் குறைந்துள்ளது. இது இறுதியில் விவசாயிகளுக்கு பெங்களூரா வகைக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.4,000 முதல் ரூ.5,000 வரை குறைந்த விலைக்கு வழி வகுத்தது.*

*“மா” விவசாயிகளின் துயரத்தைப் போக்க, நடைமுறையில் உள்ள விற்பனை விலைக்கும் சந்தை தலையீட்டு விலைக்கும் (MIP) உள்ள வேறுபாட்டை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் சந்தை தலையீட்டுத் திட்டத்தின் (Market Intervention Scheme under PM-AASHA) கீழ் விலை வித்தியாசத் தொகையினை செலுத்தும் வழிமுறையை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*ஒரு ஹெக்டேருக்கு ரூ.50,553/- என்ற சராசரி உற்பத்திச் செலவு மற்றும் 6.51 மெட்ரிக் டன்/ஹெக்டேர் என்ற சராசரி உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்டு, சந்தை தலையீட்டு விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.7,766/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சந்தை விலையை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.5,000/- எனக் கருத்தில் கொண்டு, ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.2,766/- பற்றாக்குறை செலுத்த முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்திற்கும் ஒன்றிய அரசுக்கும் இடையே 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்ள ரூ.62.93 கோடி மொத்த தொகையாக முன்மொழியப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே, 2.27 இலட்சம் மெட்ரிக் டன் பெங்களூரா மாம்பழங்களுக்கு நேரடிப் பலன் பரிமாற்றமாக, விலைப் பற்றாக்குறைக் கட்டணத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், விற்பனையில் சிரமத்தைத் தடுத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டில் சந்தை தலையீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்குமாறு இக்கடிதத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய வேளாண்மை - உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.*

## டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்! எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமையில்

# அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் செம்மொழிநாள் மாபெரும் புகழரங்கம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் – திண்டுக்கல் ஐ.லியோனி – தராசு ஷியாம் – ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்புரை!

*சென்னை, ஜூன் 24 -*

*முத்தமிழறிஞரின் பிறந்தநாளான செம்மொழி நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் கிழக்குப் பகுதி சார்பில் மாபெரும் புகழரங்கம் “இலட்சியக் கலையின் போராளி இலக்கியம் செதுக்கிய படைப்பாளி” நிகழ்ச்சி இன்று 25.6.2025 புதன்கிழமை மாலை 6 மணிக்கு கொரட்டூர் கிரஸ் பேலஸ் அருகில் அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜன் தலைமையில் நடைபெறுகிறது.*

*கழகப் பொருளாளர் - டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே,. சேகர்பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.கே. மூர்த்தி எம்.சி., டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., நீலகண்டன் எம்.சி., எல்.பி.எஃப்.மோகன், டாக்டர்ஜி.சாந்தகுமாரி எம்.சி., டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., ஜெ.பாலமுருகன் உஷா நாகராஜ் எம்.சி., கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி., து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, இ.ராமு, சீ.லோகநாதன், சு. மோக ன்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*அம்பத்தூர் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் கே.செல்வம், கோ.முத்துகுமார சாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவ டிவேல், ச.கோதண்டன், கோ. இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*போக்குவரத்து (ம) மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் புகழரங்கத்தை துவக்கி வைத்து பேசுகிறார். கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, பத்திரிக்கையாளர் தராசு ஷியாம், கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் புகழுரைக்கின்றனர்.*

*நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், தொகுதி பார்வையாளர் சன்.முனியாண்டி, ப.ரங்கநாதன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே.எஸ்.இரவிச்சந்தி ரன், சங்கரி நாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே. உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி., ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதிஎத்திராசன், இசட்.ஆசாத், , மண்டல குழு தலைவர்கள் கூ.பீ.ஜெயின். சரிதாமகேஷ்குமார், ராமுலு , பகுதி செயலாளர்கள்: வே. வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், சொ.வேலு, வி. சுதாகர், எம்.சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, எஸ். பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம், கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி,*

*வானவில்விஜய், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, சுதாதீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா. பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, கே. பொற்கொடி, எம்.சி. எம்.கமல், எம்.இ.சேகர், எஸ்.உமா,*

*பகுதி கழக நிர்வாகிகள் திராவிடசெல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா, செல்லதுரை, கு.சங்கர்,*

*வட்ட கழக செயலாளர்கள்வே .ரவிந்திரன், பு.வீரா, வி.ராதாகிருஷ்ணன், மு.இரகு, டி.கண்ணபிரான், த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா,*

*மாவட்ட பிரதிநிதிகள் எம். குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், கோ.சேகர்லால், பொன் .நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.முருகானந்தம், பி.வி. மூர்த்தி, பொன்சேட்டு, ஏ.கே. டி.பாஸ்கர், ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.எஸ்.சவரிமுத்து, பா.மாறன், எஸ்.சுரேஷ் பாபு, எஸ்.கே.சதீஷ்குமார், ஏ.வி.தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். வட்டச் செயலாளர்கள் மு.விஜயகுமார், த.வ.லால் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

## கோ.சத்தியமூர்த்தி தலைமை!முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா!

# குன்றத்தூர் நகரத்தில் கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி.– செந்தில்வேல் சிறப்புரை!

*காஞ்சிபுரம், ஜூன் 25*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகரக் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவும் மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (25.6.2025 - புதன்கிழமை) மாலை 5 மணியளவில் பெரிய தெரு குன்றத்தூரில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்திற்கு நகரக் கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமை வகிக்கிறார். டி.என்.கருணாநிதி வரவேற்புரையாற்றுகின்றார்.*

*டி.கே.குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், எம். சங்கர், கே.கே. ராஜமாணிக்கம், அ.தமிழ்மாறன், டி.திருநாவுக்கரசு, லயன் என். குணசேகரன், கா.வே.சிதம்பரம், கே.மணிமாறன், ஆர்.கே.அபிபுன்னிசா, தா. கந்தசாமி, டி. என்.அருள்மொழி, டி.வி.சரவணன், எம்.குப்புசாமி, ஏ.முனுசாமி, கே.எஸ்.ராஜி, ஆர்.கே.சையத் யூசுப், டி.பி. செந்தில் குமார், ஜி.பாபு, ப.தீனதயாளன், டி.எம்.மாசங்கர், ஏ.முகமதுசுலைமான், ஏ.ராஜேஷ்குமார், கே.எம். டி.ஹரி, கிருஷ்ணன், சுரேஷ், ரவிச்சந்திரன், மா.தமிழரசன், மு.அருண்குமார், பி.ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இப்பொதுக் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழகப் பேச்சாளர் செந்தில் வேல் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், தொகுதிப் பார்வையாளர் பாஸ்கர்சுந்தரம், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ் ஜபருல்லா, குன்றத்தூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் இ.மணி மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.*

*நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கே.டில்லி பாபு நன்றி கூறுகிறார்.*

*எனவே இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள். நகர வார்டு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.06.2025) வேலூர் பென்ட்லேண்ட் அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துமனையை திறந்து வைக்கவுள்ளதை முன்னிட்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும் நேற்று (24.06.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் மா.சுனில்குமார், முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், கூடுதல் இயக்குநர் மருத்துவக்கல்வி மரு.தேரணிராஜன், வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.ரோகிணிதேவி உட்பட பலர் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் தொகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு ”செம்மொழி 18 மகளிர் கைகளில் சுழல்நிதி! மாறும் வரலாற்றுப் புதுவிதி!! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் சரிதா மகேஷ்குமார் எம்.சி தலைமையில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி, மேயர் .பிரியாராஜன், விஜயா தாயன்பன், பேராசிரியர் பர்வின் சுல்தானா, திவ்யா சத்யராஜ் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், புனிதவதிஎத்திராசன், எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரைக்கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி எம்.தாவுத்பீ எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதாபொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி ,P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.டி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி. அதிபதி மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்